## எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

# மக்கள் சாசனம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இந்திய ஆட்சிப் பணிநிலை அலுவலரான ஒரு இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இவ்வியக்ககம் கதவிலக்கம் எண் 110, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் இயங்குகிறது.

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அலகுகள் வருமாறு:-

1. அரசு மைய அச்சகம், சென்னை-79.
2. அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-104.
3. அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகம்.
4. புதுக்கோட்டை, திருச்சி, விருத்தாசலம், சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசுக் கிளை அச்சகங்கள்.
5. 112, அண்ணா சாலை, சென்னை-2ல் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை பிரிவு மற்றும் சென்னை உயர்நீதிமன்றக் கட்டிட வளாகத்தில் உள்ள துணை விற்பனை நிலையம்.
6. எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1.

### துறை ஆற்றும் பணிகள்

* அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள்,
* சட்டமன்ற உறுப்பினர்களின் விவாதக் குறிப்புகள்,
* பல்வேறு குழுக்களின் அறிக்கைகள்,
* வரவு-செலவுத் திட்டங்கள்,
* மிகக் கமுக்க ஆவணங்கள்,
* பல்வேறு துறைகளின் கையேடுகள்,
* வாராந்திர அரசிதழ்கள்,
* தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய அறிவிக்கைகள் முதலிய பல்வகை அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பொதுமக்கள் தொடர்புடைய இத்துறையின் பணிகள்

(அ) இத்துறையின் பொது தகவல் மற்றும் மேல் முறையீட்டு அதிகாரிகளின் விவரம், இணைப்பு–1 இல் அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுமக்களின் விண்ணப்பத்தின்பேரில் பொதுவான பெயர் மாற்றம், மத மாற்றத்தின் காரணத்தால் பெயர் மாற்றம் குறித்த அறிவிக்கைகளை **தமிழ்நாடு அரசிதழில்** ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. இதற்கான கட்டணம் ரூ. 415/– (அஞ்சல் செலவு உட்பட) வசூலிக்கப் படுகிறது. தற்பொழுது தமிழ் பெயர் மாற்றம் அரசிதழில் பிரசுரம் செய்ய அரசால் ஆணையிடப்பட்டு இதற்கான கட்டணம் ரூ. 50/– + ரூ. 65/– (அஞ்சல் கட்டணம்) வசூலிக்கப்படுகிறது. (இதற்கான வழிமுறைகள் இணைப்பு-2 இல் அளிக்கப்பட்டுள்ளன.)

(இ) பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய தமிழ்நாடு அரசின் ஆணைகள், நிலத்தைக் கையகப்படுத்தும் ஆணைகள், தொழிலாளர் தீர்ப்பாய ஆணைகள் போன்றவை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படுகின்றன. (அரசிதழ் பற்றிய விவரங்கள் இணைப்பு-3 இல் அளிக்கப்பட்டுள்ளன.)

(ஈ) **112**, அண்ணா சாலை, சென்னை-**2** என்ற முகவரியில் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை பிரிவில் **தமிழ்நாடு அரசிதழ்,** அரசு வெளியீடுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிவிப்பு மடல், மாவட்ட கணக்கெடுப்புக் கையேடுகள், விதிகள்,விதித்தொகுப்புகள், விதி நூல்கள் முதலியவை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. (இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 4-இல் அளிக்கப்பட்டுள்ளன.)

(உ) இத்துறையின் www.tn.gov.in/stationery printing இணையதளம் **20–11–08** அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் பொதுமக்கள் பெயர் மற்றும் மத மாற்றம் குறித்த படிவங்களை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அரசிதழ்கள் பற்றிய விவரம் இந்த இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. இதனை பார்த்து பொதுமக்கள் பயன் அடையலாம். மேலும் இப் பொருள் குறித்த ஐயப்பாடுகளை E-mail: admpd@tn.gov.in என்ற முகவரிக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பலாம்.

## இணைப்பு–1

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பொதுத்தகவல் மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகளின் விவரம்.

| *வ.எண்.* (1) | *அலகின் பெயர்* (2) | *பொதுத் தகவல் அதிகாரிகள்* (3) | *மேல்முறையீட்டு அதிகாரிகள்* (4) |
|---|---|---|---|
| 1. | இயக்குநரகம்,<br>சென்னை–2. | உதவி இயக்குநர் (வெளியீடுகள்)<br>தொலைபேசி எண் 044–2852 0038<br>2852 0039<br>2852 0040<br>2852 0041 | இணை இயக்குநர்<br>தொலைபேசி எண்044–2852 0038<br>2852 0039<br>2852 0040<br>2852 0041 |
| 2. | அரசு மத்திய அச்சகம்,<br>சென்னை–79. | துணைப் பணிமேலாளர் (திட்டம்)<br>தொலைபேசி எண் 044–2520 2227<br>2520 2228<br>2520 2232 | பணி மேலாளர்<br>தொலைபேசி எண் 044–2520 2227<br>2520 2228<br>2520 2232 |
| 3. | அரசு கிளை அச்சகம்,<br>உயர்நீதி மன்ற வளாகம்,<br>சென்னை–104. | கண்காணிப்பாளர்<br>தொலைபேசி எண் 044–2534 0082 | துணைப் பணிமேலாளர்<br>தொலைபேசி எண் 044–2534 0082 |
| 4. | அரசு எழுதுபொருள்<br>அலுவலகம்,<br>சென்னை–1. | உதவி இயக்குநர் (எ.பொ.)<br>தொலைபேசி எண் 044–2524 8748<br>2525 0447 | துணை இயக்குநர் (எ.பொ.)<br>தொலைபேசி எண் 044–2524 8748<br>2525 0447 |
| 5. | அரசு கிளை அச்சகம்,<br>மதுரை–7 | உதவி இயக்குநர் (பொ.)<br>தொலைபேசி எண் 0452–2566253 | துணைப் பணிமேலாளர்<br>தொலைபேசி எண் 0452–2566253 |
| 6. | அரசு கிளை அச்சகம்,<br>திருச்சி. | கண்காணிப்பாளர்<br>தொலைபேசி எண் 0431–2500360 | கிளை மேலாளர்<br>தொலைபேசி எண் 0431–2500360 |
| 7. | அரசு கிளை அச்சகம்,<br>சேலம். | கண்காணிப்பாளர்<br>தொலைபேசி எண் 0427–2448569 | கிளை மேலாளர்<br>தொலைபேசி எண் 0427–2448569 |
| 8. | அரசு கிளை அச்சகம்,<br>விருத்தாலம். | கண்காணிப்பாளர்<br>தொலைபேசி எண் 04143–260276 | துணைப் பணிமேலாளர்<br>தொலைபேசி எண் 04143–260276 |
| 9. | அரசு கிளை அச்சகம்,<br>புதுக்கோட்டை. | கண்காணிப்பாளர்<br>தொலைபேசி எண் 04322–222318 | கிளை மேலாளர்<br>தொலைபேசி எண் 04322–222318 |
| 10. | அரசு கிளை அச்சகம்,<br>உயர்நீதி மன்ற வளாகம்,<br>சென்னை, மதுரை–23. | கண்காணிப்பாளர்<br>தொலைபேசி எண் 0452–2433207 | துணைப் பணிமேலாளர்<br>தொலைபேசி எண் 0452–2433207 |

**இணைப்பு-2**

**சாதாரண பெயர் மாற்றம்/மத மாற்றத்தினால் பெயர் மாற்றம்**

| | | |
|---|---|---|
| **1.** | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி .. | இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இப்பொருள் குறித்த மற்ற விவரங்கள் பெற உதவி இயக்குநர் (வெளியீடுகள்) 112, அண்ணா சாலை, சென்னை–2 அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். |
| **2.** | விண்ணப்பித்தல் குறித்த விவரங்கள் .. | விண்ணப்பங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் மேற்குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, அஞ்சல் மூலமாகவோ, இத்துறையின் இணையதளமான www.tn.gov.in/stationery printing மூலமாகவோ பெறலாம். விண்ணப்பத்தின் பின்புறத்தில் குறிக்கப்பட்டுள்ள விவரங்களைத் தவறாது அளித்தல், பெயர் மாற்றம் குறித்த அறிவிக்கைகளை விரைவில் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிட வழிவகுக்கும். |
| **3.** | சம்பந்தப்பட்ட அரசிதழ் படிவங்களைப் .. பெறுதல் | விண்ணப்பப் படிவத்தில் குறிக்கப்பட்டுள்ள தொகையைச் செலுத்துபவர்களது பெயர் மாற்றம் குறித்து அறிவிக்கை வெளியிடப்பட்ட அரசிதழ் பகுதியின் ஐந்து படிகள் அஞ்சல் மூலம் விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படும். அதற்கு மேலும் படிகள் தேவைப்பட்டால், உதவி இயக்குநர் (வெளியீடுகள்), அரசு வெளியீடுகள் விற்பனைப் பிரிவு, சென்னை-2ல் இருந்து அதற்கான உரிய தொகைகளைச் செலுத்திப் பெறலாம். பெயர் மாற்றம் அரசிதழில் வெளியிடப்பட்ட விவரத்தினை இத்துறையின் இணையதளத்திலும் காணலாம். |

*பின்குறிப்பு:* **தமிழ்நாடு அரசிதழ்** படிகள் அரசு வெளியீடுகள் விற்பனை பிரிவில் ஒரு வருடத்திற்கு மேல் வைத்துக் கொள்ளப்படுவதில்லை. தேவையான அரசிதழ் பிரதிகளை உடனே அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 4. அறிவிக்கை வெளியிடுவதற்கான தொகையைச் செலுத்துதல் | .. | விண்ணப்பத்தின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அரசு வெளியீடுகள் விற்பனைப் பிரிவு, 112, அண்ணா சாலை, சென்னை-2-ல் அரசுப் பணிநாட்களில் காலை 10.00 மணி முதல் 1.30 மணி வரையிலும், மதியம் 2.00 மணி முதல் 3.00 மணி முடியவும் செலுத்தி ரசீதைப் பெறலாம் அல்லது உதவி இயக்குநர்(வெளியீடுகள்), எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கத் தக்க குறுக்குக் கோடிட்ட கேட்பு வரைவோலை மூலமும் செலுத்தலாம். |
| 5. பணி நாட்கள் | .. | திங்கள் முதல் வெள்ளி வரை |
| 6. இப்பொருள் குறித்து குறைகள் பற்றித் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | .. | உதவி இயக்குநர் (வெளியீடுகள்), 112, அண்ணா சாலை, சென்னை-2–ஐ தொடர்பு கொள்ளும்போது தங்கள் முழு முகவரி, தொகை செலுத்தியதற்கான ரசீது எண்/கேட்பு வரைவோலை எண் மற்றும் நாள் ஆகிய விவரங்களைத் தவறாமல் குறிப்பிடவும்.<br>தொலைபேசி எண் : 044 - 2854 4412<br>044 - 2854 4413 |
| 7. குறிக்கோள் | .. | கடந்த காலங்களில் பெயர் மாற்றம்/மதமாற்றம் போன்ற விவரங்களை **அரசிதழில்** பிரசுரம் செய்வதில் குறிப்பிட்ட கால தாமதம் மற்றும் பொது மக்களிடையே ஏற்பட்ட மனக்கசப்பு, அலைச்சல், கால விரயம் முதலியவற்றைத் தவிர்க்கும் நோக்கத்துடன் திங்கள் முதல் வெள்ளி வரை பெறப்படும் விண்ணப்பங்கள் அடுத்து வரும் புதன்கிழமைகளில் தவறாது பிரசுரம் செய்ய பொது மக்களுக்கு இத்துறை சேவை புரிந்துவருகிறது. |

## இணைப்பு-3

## தமிழ்நாடு அரசிதழ் பிரதிகளைப் பெறுதல்

| | | |
|---|---|---|
| **1.** தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | .. | பணி மேலாளர், அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை-**79.**<br>தொலைபேசி எண் - **044–2520 2227**<br>**044-2520 2228**<br>- **044-2520 2229** |
| அரசிதழ் பற்றிய விவரங்கள் | .. | **தமிழ்நாடு அரசிதழ்,** அரசுக்கும் மக்களுக்கும் ஒரு பாலமாகச் செயல்படுகிறது**.** பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய அரசு ஆணைகள், நிலத்தைக் கையகப்படுத்தும் ஆணைகள், தொழிலாளர் தீர்ப்பாய ஆணைகள், வரிவிதித்தல் குறித்த ஆணைகள்,சமூக நலத்திட்டங்கள் போன்றவை அரசிதழில் வெளியிடப்படுகின்றன**.** |
| **2.** அரசிதழில் பிரிவுகளும் விவரங்களும் | .. | **தமிழ்நாடு அரசிதழின்** பல்வேறு பிரிவுகளும், அவற்றில் வெளியிடப்படும் பொருள் குறித்த விவரங்களும் கீழே அளிக்கப்பட்டுள்ளன**.** மக்கள் தேவைப்படும் பிரிவுக்கான சந்தாத் தொகையைச் செலுத்தினால் பிரதி வாரம் அரசிதழ் தங்கள் வீடு தேடி வரும்**.** |
| **3. பகுதி எண்.** | .. | **விவரங்கள்** |
| **1.** பகுதி I | .. | அனைத்திந்திய பணிகளுக்கான பதவி உயர்வு, பணி நீக்கம் இரங்கல் அறிவிப்புகள் மாஜிஸ்டிரேட்டுகளை பதவியில் அமர்த்தும் சடங்கு, மாண்புமிகு அமைச்சர்களிடையே அலுவல் ஒதுக்கீடு ஆகியவை குறித்து அறிவிக்கைகள்**.** அரசும், உரிமையியல், குற்றவியல், குற்றவியல் நடுவர் சார்ந்த தகராறுகளில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய தரப்பினரும் நீதிமன்ற வழக்குகளில் குறிப்பிட வேண்டியவை**.** |
| **2.** பகுதி II பிரிவு **1** | .. | தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்படும் மக்கள் கவனத்தை ஈர்க்கும் அல்லது மக்கள் தொடர்புடைய அறிவிக்கைகள் விற்பனை வரி விகிதத்தில் மாற்றங்கள், வேளாண் விளை பொருட்களுக்கு தரம் நிர்ணயித்தல், கொள்முதல் விலை நிர்ணயம் செய்தல், மது விலக்கு ஆயத் தீர்வை தொடர்பான சட்டத் திருத்தங்கள், நிலச் சீர்திருத்தம் தொடர்பான அறிவிக்கைகள், சட்ட விரோதமான நடவடிக்கைகள் தடை செய்தல் பற்றிய அறிவிக்கைகள் - அணையிலிருந்து நீர்ப் பாசனம் செய்தல் - தேதி அறிவித்தல் - அரசு பொது விடுமுறை அறிவிக்கை**.** |

| | |
|---|---|
| பகுதி II பிரிவு 2 | .. மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் மோட்டார் வாகன வரி செலுத்துவதிலிருந்து குறிப்பிட்ட சில வாகனங்களுக்கு விலக்கு அளித்தல், நிலத்தைக் கையகப்படுத்துதல், கடன் குறித்த அறிவிக்கைகள், பேருந்து தடங்களைத் தேசிய மயமாக்குதல். தொழிற் தகராறுகள் சட்டம், முத்திரைத்தாள் சட்டம், நிதி நிறுவன சட்டம், பதிவுத்துறை சட்டம் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் சட்டம், குற்றவியல் காவல் நிலைய எல்லை நிர்ணயம், தமிழ்நாடு வனக்கோட்டம் குறித்த அறிவிக்கை, இந்திய கிறித்துவ திருமண சட்டம், நகர் ஊரமைப்பு திட்ட மாற்றம் வழங்குதல், அரசு ரகசிய காப்பு சட்டம், தமிழகத்திலுள்ள பல்கலைக் கழக சட்ட விதிகள், தமிழக முதல்வர் காவல் துறையினருக்கு பதக்கம் வழங்குதல், மாசு கட்டுப்பாட்டு சட்டம், எரிசாராய இந்திய தயாரிப்பு அறிவிக்கை. |
| 3. பகுதி III பிரிவு 1(a) | .. பொதுவான சட்டமுறை விதிகள் தலைமைச் செயலகத் துறைகளால் வழங்கப்படும் அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை விதிகள் போன்றவைகள். உதாரணமாக, சென்னை பார்மசி கௌன்சில் விதிகளுக்கு திருத்தங்கள். |
| பகுதி III பிரிவு 1(b) | .. பணி விதிகள், அட்ஹாக் விதிகள், இந்திய சட்டப்படி வெளியிடப்படும் ஆணைகள், அறிவிக்கைகள் (உ—ம்) மாநில மற்றும் சார்நிலை பணி விதிகளுக்கான திருத்தங்கள். |
| பகுதி III பிரிவு 2 | .. துறைத் தலைவர்களால் வெளியிடப்படும் சட்டப்படியான அறிவிக்கைகள் மற்றும் ஆணைகள். |
| 4. பகுதி IV பிரிவு 1 | .. தமிழ்நாடு சட்ட வரைவுகள். |
| பகுதி IV பிரிவு 2 | .. தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள். |
| பகுதி IV பிரிவு 3 | .. மத்திய சட்ட வரைவுகள். |
| பகுதி IV பிரிவு 4 | .. மத்திய சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள். |
| 5. பகுதி V பிரிவு 1 | .. தமிழ்நாடு அரசு பொதுத் (தேர்தல்கள்) துறையின் அறிவிக்கைகள். |
| பகுதி V பிரிவு 2 | .. துறைத் தலைவர்களின் தேர்தல் அறிவிக்கைகள். |
| பகுதி V பிரிவு 3 | .. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் விதி 192-ன் கீழ் சட்டமன்ற உறுப்பினரைத் தகுதியின்மை செய்வது குறித்து மேதகு ஆளுநரின் முடிவு. |
| பகுதி V பிரிவு 4 | .. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கைகள். |

| | | |
|---|---|---|
| 6. பகுதி VI பிரிவு 1 | .. | மக்களுக்கு அக்கறையுள்ள பொருள் பற்றி துறைத் தலைவர்கள் வெளியிடும் அறிவிக்கைகள். சங்கங்கள் பதிவு மற்றும் கலைத்தல் - நில உச்சவரம்பு கையகப்படுத்துதல் - நீதித்துறையின் அனைத்து அறிவிக்கைகள் - நகர்ப்புற திட்டக்குழுமம் அடுக்குமாடி தொடர்பான அறிவிக்கை. மருத்துவக்குழு தேர்தல் மற்றும் அலுவலர் நியமனம் அறிவிக்கைகள். |
| பகுதி VI பிரிவு 2 | .. | துறைத் தலைவர்களால் வெளியிடப்படும் மக்களில் ஒரு பிரிவினருக்கு மட்டும் அக்கறைக்குரிய அறிவிக்கைகள். மாவட்ட ஆட்சியர், தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் அறிவிக்கை. மாநில தேர்தல் ஆணைய அறிவிக்கை. கல்வி சான்றிதழ் இழப்பு அறிவிக்கை, ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம், தமிழக சட்டப் பணிகள் துறை அறிவிக்கை, தமிழக மின்சார ஒழுங்கு முறை குழு அறிவிக்கை. |
| பகுதி VI பிரிவு 3(a) | .. | மாநில மற்றும் மத்திய அரசு நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிவிக்கைகள் (தொகையைப் பெற்ற பின்னர் வெளியிடப்படும்). நீதித் துறையின் நொடிப்பு மனு அறிவிக்கை, துறைமுகக் கழகங்களின் அறிவிக்கைகள், வஃக்பு வாரிய அறிவிக்கைகள். |
| பகுதி VI பிரிவு 3(b) | .. | அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிவிக்கைகள். தமிழ்நாடு மின்வாரிய அறிவிக்கைகள், பல்கலைக் கழகங்களின் அறிவிக்கைகள். |
| பகுதி VI பிரிவு 4 | .. | பெயர் மாற்றம், (தமிழ் மற்றும் ஆங்கிலம்) போன்ற தனியார் விளம்பரங்கள்—தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள் அளிக்கும் விளம்பரங்கள்—கம்பெனிகள் சட்டத்தின்கீழ் விளம்பரங்கள். |

**7. நிலச் சீர்த்திருத்தம்**

| | | |
|---|---|---|
| 1. சந்தா குறித்த விவரங்கள் | .. | அரசிதழில் தேவையான பகுதி/பிரிவுக்கான சந்தாத் தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகை குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். சந்தாத் தொகை செலுத்தப்பட்ட மாதத்தின் அடுத்த மாதத்தின் முதல் நாளிலிருந்து சந்தா தொகைக்கான காலம் கணக்கிடப்படும். |
| 2. தனிப்பட்ட பிரதியை பெறுதல் | . | தமிழ்நாடு அரசிதழின் குறிப்பிட்ட பிரதியை மட்டும் பெற விரும்பினால் 112, அண்ணா சாலை, சென்னை-2இல் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம்.<br>*குறிப்பு:* தமிழ்நாடு அரசிதழின் பிரதிகள் ஒரு வருடம் வரை விற்பனைக்காக தக்க வைத்துக் கொள்ளப்படுகிறது. எனவே அரசிதழில் வெளியிட்டவுடன் பிரதிகளை உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |
| 3. புகார்கள் மற்றும் ஆலோசனைகளுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | .. | பணி மேலாளர், அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை-79.<br>தொலைபேசி எண் - 044-2520 2227, 2520 2228, 2520 2229 |

## இணைப்பு-4

**பொருள்: தமிழ்நாடு அரசிதழ் அரசு வெளியீடுகள் முதலியவை விற்பனை செய்தல்.**

(அ) விற்பனை நிலைய முகவரி

1. அரசு வெளியீடுகள் விற்பனை பிரிவு.
   112, அண்ணா சாலை, சென்னை-600 002.

2. துணை விற்பனை நிலையம், அரசு கிளை அச்சகம்,
   உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-600 104.

(ஆ) இந் நிலையத்தில் விற்பனை செய்யப்படும் வெளியீடுகள் மற்றும் அவை விற்பனைக்காகத் தக்க வைத்துக் கொள்ளப்படும் கால வரையறையும் கீழே அட்டவணையில் அளிக்கப்படுகின்றன.

| *வரிசை எண்.* | *வெளியீடுகள் விவரம்.* | *விற்பனைக்குத் தக்கவைத்துக் கொள்ளப்படும் காலம்* |
|---|---|---|
| 1. | அரசுத் தேர்வுகளுக்கான பாடத் திட்டங்கள்,மாவட்ட கெஜட்டுகள், மாவட்ட கணக்கெடுப்புக் கையேடுகள், புள்ளியியல் துறை குறித்த கையேடுகள். | 10 வருடங்கள் அல்லது புதிய நூல்கள் வெளியிடும் வரை இவற்றில் எது பிந்தையதோ அது. |
| 2. | தமிழ்நாடு அரசின் சட்டங்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழில்) நடைமுறை நூல்கள், வருவாய்த் துறையின் நடைமுறை ஆணைகள். | 7 வருடங்கள் |
| 3. | பல்வகைப்பட்ட வெளியீடுகள் | 5 வருடங்கள் |
| 4. | வரவு–செலவு வெளியீடுகள், ஐந்தாண்டு திட்ட கையேடுகள், சட்டமன்ற நடவடிக்கைகள், இந்திய சட்ட அறிவிக்கைகள் (சென்னை) | 3 வருடங்கள் |
| 5. | துறை சம்பந்தமான வெளியீடுகள், வருடாந்திர/நிர்வாக அறிக்கைகள், செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் அறிவிப்பு வெளியீட்டு கையேடுகள், தமிழ்நாடு அரசிதழ், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வெளியீடுகள். | 1 வருடம் வரை அல்லது இருப்பு தீரும் வரை எது முந்தையதோ. |

(இ) விற்பனை நிலைய வேலை நேரம் .. காலை 10.00 முதல் பிற்பகல் 1.30 மணி வரை பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி முடிய அரசுப் பணி நாட்களில் செயல்படும் (திங்கள் முதல் வெள்ளி வரை)

(ஈ) வெளியீடுகளின் இருப்பு முதலியன .. உதவி இயக்குநர் (வெளியீடுகள்), அரசு பற்றி விவரங்கள் பெற வெளியீடுகள் விற்பனைப் பிரிவு, 112, அண்ணா சாலை, சென்னை–600 002. அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். இப்பொருள் குறித்து தொலைபேசி மூலமாகவோ கடிதம் மூலமாகவோ விவரங்கள் அளிக்க பணியாளர் ஒருவர் செயல்படுகிறார். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 044 – 2852 0038
044 – 2852 0039
044 – 2852 0040
044 – 2852 0041
நீட்சி 51
044 – 2854 4412
044 – 2854 4413

(உ) அஞ்சல் மூலம் வெளியீடுகளைப் பெறுதல் .. தாங்கள் பெற விரும்பும் வெளியீடு இருப்பில் உள்ளதா, அதன் விலை, அஞ்சல் செலவு ஆகிய விவரங்களை மேற்படி அலுவலகத்தில் இருந்து பெற்று பின்னர் உரிய தொகையை உதவி இயக்குநர் (வெளியீடுகள்), அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை–600 002க்கு மணியார்டர் அல்லது வரைவு காசோலை மூலம் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பும் பொழுது புத்தகத்தின் பெயர், தேவைப்படும் பிரதிகள், முழு முகவரி, அருகிலுள்ள இரயில் நிலையத்தின் பெயர், இவ்வலுவலகக் கடித எண், நாள் ஆகியவற்றைத் தெளிவாய் தெரிவித்தல் வேண்டும்.

முகவர்கள் .. சென்னை மாநகரத்திலும், பிற மாவட்டங்களிலும் அரசு வெளியீடுகளை விற்பனை செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் உள்ளனர்.

இந்திய அரசு வெளியீடுகள் .. இந்திய அரசியலமைப்புச் சட்டம் (Constitution of India) மற்றும் மத்திய அரசு சட்டங்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில்) அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மற்ற இந்திய அரசு இதர வெளியீடுகள் சென்னை பெசன்ட் நகர், ராஜாஜி பவன் வளாகத்திலுள்ள இந்திய அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் கிடைக்கும்.

புகார்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்து அணுக வேண்டிய முகவரி .. உதவி இயக்குநர் (வெளியீடுகள்),
அரசு வெளியீடுகள் விற்பனைப் பிரிவு,
112, அண்ணா சாலை, சென்னை 600 002.
தொலைபேசி எண்: 044 – 2852 0038
044 – 2852 0039
044 – 2852 0040
044 – 2852 0041
நீட்சி 51
044 – 2854 4412
044 – 2854 4413